
மலையகத் தொடர் 04

# 2000ம் ஆண்டில் மலையகம்




வெளியீடு : லீயோ மார்கா ஆஸ்ரம்,
121/1, புனித் தோமையார் வீதி,
பண்டாரவளை.

## ஆசிரியர் கருத்து

மலையகம் என்பது எமது அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த எண்ணக் கருவாக அமைந்துள்ளது, மலையகத் தமிழர் என்ற இத்தொடர் பொதுப்படையாக இலங்கையின் மலையகப் பகுதிகளிலுள்ள பெருந்தோட்டங்களிலும் அவைகளைச் சார்ந்த நகர்ப்புறங்களிலும் வாழும் அண்மைக்கால இந்திய வம்சாவளியினரைக் குறிக்கின்றது. இதில் முக்கியமாகப் பெருந்தோட்டத் தொழிலாளர் முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். இந்தச் சமுதாயம் வரலாற்றில் மிக மோசமான காலனித்துவ சுரண்டலுக்கும், தேசீய ஒடுக்குமுறைக்கும் உட்பட்ட ஒரு சமூகமாகும். இன்று இவர்கள் லயன் வாழ்க்கை மரபிலிருந்து விடுபட்டு மேல் நிலை நோக்கி ஒரு சமூக அசைவியக்கத்திற்காக தொழிற் படத் தொடங்கியுள்ளார்கள். இந்த அசைவியக்கத்தை மக்கள் மத்தியில் வலுப்படுத்தி அதை முன்னெடுத்துச் செல்வதற்காகவே "மலையகம் 2000" என்ற இந்தச் சிற்றேடை மலையக சமூகத்திற்கும், மலையக மக்களின் முன்னேற்றத்தை விரும்பும் சகலருக்கும் சமர்ப்பிக்கின்றோம்.

அருட்திரு எஸ். சீதபொன்கலன்,
லீயோ மார்கா ஆஸ்ரம்,
பண்டாரவளை.

15. 10. 1995

உட்புகுமுன்......

20ம் நூற்றாண்டு முடிவதற்கு இன்னும் 5 வருடங்களே இருக்கின்றன. அதன்பின் ஒரு புதிய நூற்றாண்டு உதயமாகப் போகின்றது. இந்தப் புதிய நூற்றாண்டில் அதாவது 2000வது ஆண்டில் மனுக்குலம் முழுவதும் புதியதொரு வாழ்வை நோக்கி நகரத் தொடங்கவேண்டும். வளமான வாழ்வில் அடியெடுத்து வைக்கவேண்டுமென்று பலர் ஆசைப்பட்டு அதற்கான அலுவல்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள்.

"2000ம் ஆண்டில் சகலருக்கும் சுகாதாரம்", "2000 ஆண்டில் யாவருக்கும் புகலிடம்" , "2000 ஆண்டில் அதிக உற்பத்தி" போன்ற சுலோகங்கள் இப்போது பரவலாகப் பேசப்படுகின்றன. எமது நாட்டிலும் கடந்த 175 ஆண்டுகளாக அரை அடிமைத்தனத்தில் சிக்கி, வாழ்வின் சகல கூறுகளிலும் மிகவும் பின் தங்கியவர்களாக வாழ்கின்ற மலையக மக்களுக்கும் 2000 ஆண்டில் ஒரு புதிய விடியல் தோன்றவேண்டும். வாழ்வு மலர வேண்டும் என்ற நோக்குடன் "2000 ஆண்டில் மலையகம்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு பண்டாரவளை, லீயோ மார்கா ஆசிரமத்தில் நடத்தப்பட்டது. இதில் அற்றன், போகவந்தலாவ, இரத்தினபுரி, மொனறாகல, பண்டாரவளை, அப்புத்தளை ஆகிய இடங்களைச்சேர்ந்த 25 பேர் கலந்து கொண்டனர். இதில் 2000ம் ஆண்டில் மலையக அரசியல், கல்வி, சுகாதாரம், கலாச்சாரம், கோட்பாடுகள், பெண்கள், சமயம், மக்கள் அமைப்புக்கள், சமூகம், பொருளாதாரம் ஆகிய பத்து விடயங்களில் மலையகம் மாற்றத்தைக் காணவேண்டும் என்ற கருத்துக்கள் பரிமாறப்பட்டன. ஒவ்வொரு தலைப்பிலும் பரிமாறப்பட்ட முக்கிய கருத்துக்களின் தொகுப்பே இங்கு தரப்படுகின்றன. வாசியுங்கள்! சிந்தியுங்கள்! செயற்படுங்கள்!!!

1,01 வறுமை - ஊதியம் போதாமை - வேலையின்மை.

1.02 தோட்டம் சாரா மக்களுக்கு வேலை வழங்கல்.

1.03 பெருந்தோட்டப் பயிர் செய்கைக் குறைப்பு
- நிலம், உற்பத்தி.

1.04 தரிசுநிலங்கள் வெளியாருக்குப் பகிர்தல், பயிர்செய்கை மேற்கொள்ளப்படாமை.

1.05 தொழில் ரீதியாக வர்க்கப்பிரிவுகள்.

1.06 வரட்சி நிவாரணம், ஓய்வூதியம் இல்லை.

1.07 தொழிலாளருக்குப் பாதுகாப்பான உடையில்லை.

1.08 பழமை வாய்ந்த தொழிற்சட்டங்கள்.

1.09 தனியார் மயத்தில் இலாபமே குறிக்கோள்.

1.10 சுய தொழிலில் ஈடுபடும் போது பல பிரச்சினைகள்.

1,01 குடும்பத்திற்குத் தேவையான அடிப்படை ஊதியம் - மாதச்சம்பளம், சுயதொழில்.

1.02 தோட்டத்தில் வாழ்பவர்களுக்குத் தொழில் வழங்குதலில் முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும்.

1.03 விஞ்ஞான, நவீன ரீதியாக உற்பத்தியை அதிகரித்தல், மாற்றுப் பயிர்ச்செய்கை.

1.04 தரிசுநிலங்களை தோட்ட மக்களுக்குப் பகிர்ந்தளித்தல். கால்நடை பயிர் செய்கைக்கு உபயோகித்தல்.

1.05 எல்லோரும் மனித மாண்போடு மதிக்கப்படல் - பிரிவுகள், ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட வேண்டும்.

1.06 வரட்சிநிவாரணம், ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும்.

1.07 தொழிலாளருக்குப் பாதுகாப்பான உடை, விசேஷமாக பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

1.08 தொழிலாளரின் நன்மை கருதி தொழிற்சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

1.09 தொழிலாளர் முன்னேற்றத்திற்கு ஏற்ற விதத்தில் அமையவேண்டும். (மக்கள் மயம்)

1.10 சுய தொழில்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

2.01 எல்லோருக்கும் பிரஜாவுரிமை வழங்கப்படவில்லை.

2.02 அரசியல்யாப்பில் மலையக மக்களுக்கு எதிரான சரத்துக்கள், பாகுபாடுகள் காணப்படுகின்றன.

2.03 மலையக மக்களின் சனத்தொகைக்கேற்ப பிரதி நிதிகள் தெரிவு செய்யப்படுவதில்லை.

2.04 அநேகமான மக்கள் அரசியலில் ஆர்வமில்லை, ஏனோ தானோ மனப்பான்மை.

2.05 மலையக மக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் தங்களுக்கென ஒரு குறிப்பிட்ட பகுதி இல்லாமை.

2.06 மக்களை முழு முன்னேற்றமான வாழ்வுக்கு வழி நடத்தக் கூடிய தலைவர்கள் அற்றநிலை.

2.07 அரசியலில் பெரும்பான்மை ஆதிக்கம் மலையகமக்கள் மத்தியில் இன வாதத்தை வலுப்படுத்துகின்றது.

2.08 அரசியல்த் தலைவர்கள் சுயமாக செயல்படாமல் சுயநலவாதிகளாகவே இருக்கின்றார்கள்.

2.09 மக்கள் ஒரு வாக்களிக்கும் இயந்திரமாகவே இயங்கு கின்றார்கள். வாக்குறுதிகள் செயற்படுத்தப்படு வதில்லை.

2.10 பல அரசியல் கட்சிகள் மலையக மக்களின் வாக்குப் பலத்தை சீர்குலைக்கிறார்கள்.

## 2000ம் ஆண்டில்

2.01 இந்த மண்ணில் பிறந்த(மலையக மக்கள் யாவரும்) ஒவ்வொருவரும் இந்நாட்டு மக்கள், சகல உரிமைகளும் முழுமையாக அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

2.02 புதிய அரசியல்யாப்பில் எல்லாப் பாகுபாடுகளும் நீக்கப்பட்டு சகல மக்களும் சமத்துவமாகக் கணிக்கப்பட வேண்டும்.

2.03 சனத்தொகைக்கேற்ப பாராளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய அரசியல் யாப்பில் சட்டங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

2.04 சகல மக்களும் அரசியல் அறிவு பெற்று வாக்காளர்களாகப் பதியப்பட்டுச் சுதந்திரமாகப் பிரதி நிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டும்.

2.05 ஒரு பிராந்திய சபை உருவாக்கப்பட்டு அதில் மலையக மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து, முன்னேற்றத்திட்டங்களில் ஈடுபடவேண்டும்.

2.06 புதிய பல தலைவர்கள், தலைவிகள் உருவாக்கப்பட்டு, அவர்கள் தமது சமூகத்தின் நலனுக்காகப் பாடுபடவேண்டும்.

2.07 சகல இனங்களும் தொகை என்ற அடிப்படையிலல்லாமல் அனைவரும் சமம் என்ற அடிப்படையில் அரசியல் நடைமுறைகள் அமைய வேண்டும்.

2.08 தலைவர்கள் சுயமான, மனசாட்சியோடு, சுதந்திரமாக செயல்பட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும்.

2.09 வாக்குரிமை மூலமாக மற்ற உரிமைகளைப்பெற்று, பெருந்தோட்ட அமைப்பு முறைமையைமாற்றி சமத்துவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

2.10 மக்கள் எல்லோரும் ஒரே கட்சியின் கீழ் ஒன்று கூடி தங்கள் வாக்குப் பலம் மூலமாக ஒற்றுமையை உருவாக்க வேண்டும்.

3.01 எமது சமூகம் தனித்துவான சிந்தனையின்றி இருக்கின்றது. மக்கள் சுயநலவாதிகளாகவே இருக்கின்றார்கள்.

3.02 நாங்கள் இன்று இரண்டாந்தரப் பிரஜைகள் என்றே கணிக்கப்படுகின்றோம்.

3.03 எமது சமூகத்திற்கு எதிராக இழைக்கப்படும் இன்னல்களை நாம் இனம் காணாமல் இருக்கின்றோம்.

3.04 எமது சமூகத்திற்கு 175 வருடகாலமாக லயன் காம்பராக்கள்தான் புகலிடமாக இருக்கின்றன.

3.05 எமது சமூகத்தில் புரையோடிப்போன மிதமிஞ்சிய குடிப்பழக்கத்தினால் பல சீர்கேடுகளுக்கு ஆளாகிறோம்.

3.06 எமது சமூகத்திற்கு முறையான பாதுகாப்பில்லா - மையால் பலமுறைகள் வன்செயல்களினால் பாதிக்கப்படுகின்றோம்.

3.07 எமது லயன் காம்பராக்களின் அருகில் மின் சாரத்தைப் பார்க்கிறோம். ஆனால் எமக்கு மின்சார வசதியில்லை.

3.08 எமது சமூகத்தின் சாபக்கேடு எமது ஆழ்மனதில் பதிந்திருக்கும் சாதிமுறை மனப்பான்மையே.

3.09 இன்று எமது சமூகத்தில் படிப்படியாக தற் கொலைகள் அதிகரித்துக்கொண்டே போகின்றன.

3.10 பெருந்தோட்டத்துறை அமைப்பு எமது சமூகத்தை அடிமைப்படுத்தி வைத்திருக்கின்றது. எமது சமூகம் பிறப்புத் தொடக்கம் இறப்பு வரை பெரியதுரையிலேயே சகலத்திற்கும் தங்கிநிற்கின்றது.

3.01 நாம் ஒரு தனித் தேசிய இனம்-இனம், மொழி, பண்பாடு மூலமாக ஒன்றுபட்டிருக்கின்றோம் என்ற சிந்தனை உருவாக்கப்படவேண்டும்.

3.02 ஏனைய சமூகத்தைப்போல் நாமும் எல்லாத் துறைகளிலும் சமத்துவமாக வாழக்கூடிய நிலையை உருவாக்கவேண்டும்.

3.03 எமது சமூக வளர்ச்சிக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்படும் குடியேற்றத்திட்டம் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளுக்கு ஒரு சவால்விட வேண்டும்.

3.04 எமது குடும்பம் ஒவ்வொன்றிற்கும் சொந்த நிலத்தில் அடிப்படை வசதிகளுடன் கூடிய இல்லங்கள் அமைக்கப்பட வேண்டும்.

3.05 எமது சமூகத்தில் உள்ள மிதமிஞ்சிய குடிப்பழக்கங்களை ஒழித்து புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

3.06 எமது சமுதாயத்தை நாமே பாதுகாக்க ஒற்றுமையாக, துணிவுடன் செயல்படுவோம்.

3.07 எல்லோரும் மின்சார நீர் வசதிகளைப் பெற்று அதன் மூலமாக எமது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றப் பாடுபடுவோம்.

3.08 சாதிமுறையை ஒழித்து எமது சமூகத்தில் உள்ளயாவரும் கடவுளால் படைக்கப்பட்ட மக்கள் என்ற எண்ணத்தோடு சமத்துவமாக வாழ்வோம்.

3.09 தற்கொலைக்கான காரணங்களை அறிந்து (குடும்பம், தொழில், விரக்திமனப்பான்மை) அதிலிருந்து விடுபட ஆவன செய்வோம்.

3.10 தொழில் செய்யும்போதுதான் நிர்வாகத்தின் பொறுப்பில், ஏனைய நேரங்களில் மற்றைய மக்களைப்போல் சுதந்திரமாக வாழ புதிய கிராமங்களை உருவாக்கவோம்.

4.01 முழுமையான சமய அறிவு இல்லாததனால் அது ஒரு வெளி அடையாளமாகவே காணப்படுகின்றது.

4.02 சமய வழிபாட்டில் ஏற்றத்தாழ்வு, சாதி வேற்றுமை வலுப்படுத்தப்படுகிறது. (சாதிக்கொரு கோயில்)

4.03. சமயத்தினாலும், சமூகத்தினாலும் ஏற்படுத்தப்பட்ட மூட நம்பிக்கைகள் வலுப்படுத்தப்படுகின்றன.

4.04 மனு நீதிச் சட்டங்களின் தப்பான விளக்கங்கள் மக்கள் மாண்பை இழக்கச் செய்கின்றன.

4.05 சமயக் குருக்கள் சடங்குகளிலும் திருவிழாக்களிலும் முழுமையான கவனத்தைச் செலுத்துகின்றனர்.

4.06 இவர்களின் போதனைகள் மக்களின் வறுமை நிலையை மாற்றாது ஒரு சில நேரத்தில் வறுமையை வலுப்படுத்துகின்றன.

4.07 சமய வழிகாட்டிகள் அதிகார ஆளுமையையும் ஆண் ஆதிக்கத்தையும் தங்கவைத்துக் கொள்ளுகிறார்கள்.

4.08 சடங்குகளிலும், திருவிழாக்களிலும் பெருந்தொகை யான பணம் விரயமாக்கப்படுகின்றது. இதை ஒரு சிலர் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கின்றனர்

4.09 சமய நிர்வாகிகள் சமயம் தமது சொந்தமென்ற எண்ணத்தோடு பொதுமக்களின் பங்களிப்பை அதிகம் விரும்புவதில்லை.

4.10 இன்று அநேக மக்கள் சமயத்தில் அக்கறை காட்டாது விடுவதற்கு ஒரு சில சமய வழிகாட்டிகளின் சமயப் போதனைகள் மக்கள் வாழ்க்கைக்கு ஏற்றதாக அமையாததே காரணமாகும்.

4.01 சமயத்தின் மூல நூல்கள் மூலமாக அதன் உண்மையான விளக்கத்தை அறியமுயற்சிப்போம்.

4.02 சமயம் முக்கியமாக ஏழை மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து, சமூக ஒற்றுமை, சமூக நீதியை உருவாக்க வேண்டும்.

4.03 மூட நம்பிக்கைகளை அடியோடு மாற்றி புதிய சிந்தனைகளை உருவாக்க வேண்டும்.

4.04 காலத்தின் அறிகுறிகளை அறிந்து சமயங்கள் புதிய அணுகுமுறைகளை உருவாக்க வேண்டும்.

4.05 சடங்குகள், திருவிழாக்கள் மனிதனுடைய வாழ்க்கைக்கு ஏற்ப அமைக்கப்பட்டு மனித மனத்தில் நல்ல விழுமியங்களை உருவாக்க வேண்டும்.

4.06 போதனைகள், மக்கள் மத்தியில் அவர்களின் வாழ்வுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு விடுதலையளிக்கும் போதனைகளாக வேண்டும்.

4.07 சமயவழிகாட்டிகள் மக்களுக்குப் பணிபுரியவே இருக்கின்றார்கள். பணிபெற அல்ல, என்ற நிலைப்பாட்டை வளர்க்கவேண்டும்.

4.08 வறுமையோடு வாழும் மக்களின் வீணான பணச் செலவைக் குறைத்து, பொது மக்களிடமிருந்து பெற்ற பணத்திற்குச் சரியான வரவுசெலவுக் கணக்குகள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

4.09 சமயம் எல்லோருக்கும் சொந்தம் என்ற ரீதியில் பொதுமக்கள் அதில் பங்குபெற ஆவன செய்யப்பட வேண்டும்.

4.10 சமயம் ஒவ்வொரு மனிதனின் வாழ்விற்கும் முக்கியமானது. மனிதன் சமுதாயத்தில் அறநெறியோடும் நீதியோடும் வாழ அது உதவ வேண்டும்.

5.01 மற்றவர்களில் தங்கி நிற்கும் மனப்பானமை. (நிர்வாகம் தலைவர் ஏனையோர்).

5.02 எமது இன்றைய நிலைக்குக் காரணம், இந்தியத் தமிழர் என்ற அடைமொழி, அறியாமை.

5.03 எங்களது அடிமை நிலைக்குக் காரணம் நாங்கள் முற்பிறப்பில் செய்த குற்றத்தின் தண்டனை, விதி என்ற கோட்பாடு.

5.04 இனவாத சிந்தனைக்கு அடிபணிந்து அதை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை.

5.05 புதிய சிந்தனைக்குத் தடைவிதிப்பதும் அல்லாமல் எதிராகவும் செயல்படுகின்றோம்.

5.06 எமது தாழ்வு மனப்பான்மையை ஏற்று அதன்படி நடந்து கொள்ளுகின்றோம்.

5.07 நாங்கள் சிறுபான்மை இனம், அதனால் மற்றவர் களுக்கு அடிபணிந்து போக வேண்டும் என்ற சிந்தனை.

5.08 எங்கள் ஆழ் மனதில் பதிந்த தப்பான கோட்பாடு களினால் எங்களையும் குடும்பத்தையும், சமுதாயத் தையும் அடிமைப்படுத்துகின்றோம்.

5.09 பழைமைவாதம், பாரம்பரியம் என்ற சிந்தனையினால் எமது சமூக முன்னேற்றத்தை தடை செய்கின்றோம்.

5.10 இன்று எம்மத்தியில் புதிய கோட்பாடுகளை உருவாக்கக்கூடிய புத்தி ஜீவிகள் அற்றவர்களாக இருக்கின்றோம்.

5.01 எங்களுடைய சொந்தக்காலிலே, சொந்த சக்தியிலே தங்கி நிற்கும் நிலைமையை உருவாக்கவேண்டும்.

5.02 நாம் இலங்கை நாட்டு மக்கள் என்றும், ஏனைய மக்களைப்போல் வாழ வேண்டுமென்றும் எமது மனதில் புதிய சிந்தனைகளை உருவாக்க வேண்டும்.

5.03 எங்களை அடக்குவதற்கு உருவாக்கப்பட்ட அமைப்புமுறைகளே எங்களை அடக்குகின்றன என்பதை இனங் காண வேண்டும்.

5.04 இனவாதம் ஒரு சமூக விரோதி, அதிலிருந்து விடுபட ஒரு துணிச்சலான மன நிலையை உருவாக்க வேண்டும்.

5.05 புதிய சிந்தனைகளை ஏற்றுப் படிப்படியாக உள மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

5.06 எங்களை நாங்கள் அன்பு செய்து, மனித மாண்பை வளர்க்கும் புதிய சிந்தனைகளை உருவாக்குவோம்.

5.07 தொகை அளவில் ஏனைய சமூகத்தைவிடக் குறைய இருந்தாலும் மனிதர் என்ற ரீதியில் சமத்துவம் என்ற கோட்பாட்டை வளர்ப்போம்

5.08 எங்கள் ஆழ்மனதில் புதிய நம்பிக்கை, மனித மாண்பு, தொழில் மகத்துவம் என்ற கோட்பாடுகளைப் பதிய வைப்போம்.

5.09 ஏனைய சமூகத்திலுள்ள புதிய கோட்பாடுகளை அறிந்து எமது எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்வுக்காகப் புதிய சிந்தனைகளின் அடிப்படையில் செயல்படுவோம்.

5.10 எம் மத்தியில் கருத்தரங்குகள், உரைகள், புத்தகங்கள் மூலமாக ஆழ்மனதில் விடுதலை கோட்பாடுகளையும் பல புத்தி ஜீவிகளையும் உருவாக்குவோம்.

6.01 எமது பாரம்பரிய பண்பாட்டை இன்றைய சமுதாயம் முழுமையாக அறியாமல் இருக்கின்றது.

6.02 எமது மக்கள் நாகரீகம் அடையாமலும் உயர்ந்த கல்வியைப் பெறாமலும் இருக்கின்றார்கள்.

8.03 எமது மக்களின் கலை அறிவை முழுமையாக வெளிப்படுத்தாமல் இருக்கின்றோம்.

6.04 எமது மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அதைச் சரியாக அறியாமல் இருக்கின்றோம்.

6.05 எமது சமூகத்தில் தனித்துவமான பண்புகளை எடுத்துக்காட்டும் அமைப்புகளை நாம் அறியாமல், எடுத்துக் காட்டாமல் இருக்கின்றோம்.

6.06 எமது தன்மைகள், நிலைப்பாடுகள் ஆகியவைகளை விளங்கிக் கொள்வதற்கு எமது பண்பாடு பற்றியும் எங்கள் மத்தியில் நிலவும் கருத்து நிலைபற்றியும் தெளிவான அறிவு எம்மிடம் இல்லை.

6.07 எமது மொழியின் நுட்பங்களை அறியாததனால் எமது பண்பாடு பின்தள்ளப்பட்டுள்ளது.

6.08 எமது மக்களின் பாரம்பரிய இசைக்கருவிகள் மறைந்து போகின்றன.

6.09 இன்று நவீன நாகரீகம் என்ற பெயரில் பழமை, முதுமை இவற்றை ஒதுக்கிவிட்டோம்.

6.10 எமது மலையகத்தில் பண்பாட்டு வளர்ச்சியின் வெளிக்காட்டலுக்கு ஏற்ப கோவில்கள், மதபோதனைகள் என்பன அமையவில்லை.

6.01 எமது இனத்தின் வளர்ச்சி எமது பண்பாட்டு வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது என்பதை உணர்ந்து செயல்படுவோம்.

6.02 பண்பாடானது மனிதர்களைப் பக்குவப்படுத்துவது, ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறைக்கு மக்களை இணையவைப்போம்.

8.03 எமது இனத்தை பல்வேறுமிக்க கலை அறிவு மிக்கவர்களாக வளர்த்தெடுப்போம்.

6.04 எமது நாகரீகம், பண்பாடு மிகச் சிறப்பாக விளங்க எமது மொழியின் ஆற்றலுக்கும் அது வளர்த்த அழகுக் கலைகளுக்கும் முதலிடம் கொடுப்போம்.

6.05 எமது சமூகத்தின் தனித்துவமான பண்புகளை எடுத்துக்காட்டும் கலை வெளிபாடுகள், மதம், குடும்பம், அறிவு, பண்பாட்டு மாற்றம் பற்றிய அறிவைப் பெறுவோம்.

6.06 எமது மக்களின் வாழ்க்கை நிலையை அறிவதற்கு எமது பண்பாட்டு நடைமுறைகளைப் பற்றியும் அந்த நடைமுறைகளுடன் காரண காரிய தொடர்புடைய கருத்து நிலையைப் பற்றியும் தெளிவாக அறிய வேண்டும்.

6.07 எமது மொழிக்கு இயல் தன்மை, இசைத்தன்மை, இயக்கத் தன்மை அதாவது நாடகத்தன்மை இருப்பதை அறிந்து அவற்றை வளர்க்க ஆவன செய்வோம்.

6.08 எமது வாய்மொழிப் பாரம்பரியமானது எமது மூதாதையரின் உண்மையான வாழ்க்கை நிலையை எடுத்து இயம்புகின்றது. இதை நாட்டார் பாடல்கள் மூலமாக இசைத்தனர். இந்த அறிவைப் பெற ஆவன செய்வோம்.

6.09 முதுமையை மதிப்பதும், பழமையைப் போற்றுவதும் நமது பண்பாட்டின் ஒரு முக்கிய அம்சம் என்பதை உணர்ந்து முதியோருக்கு மதிப்பளிப்போம்.

6.10 கலை, மொழி சமய உணர்வுகளை வெளிப்படுத்தும் பண்பாட்டு நிலையங்களாக திருக்கோவில்கள் விளங்க வேண்டும்.

7.01 எமது சிறுவர்களின் (3-5 வயது வரை) எதிர்கால வாழ்வில் எந்தவிதமான அக்கறையும் இன்றி இருக்கின்றோம்.

7.02 எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு நாம் நேரம், பணம் செலவு செய்வது மிகக் குறைவு. அது மற்றவர்களே செய்ய வேண்டும் என்ற நோக்கில் இருக்கின்றோம்.

7.03 எமது பிள்ளைகளின் பாடசாலைக் கல்விக்குப் பெற்றோர், ஆசிரியர், பிள்ளைகள் முழுமையாக ஆர்வம் காட்டாமல் இருக்கின்றனர்.

7.04 திறமையான பிள்ளைகளின் தொடர்படிப்பில் (சர்வகலாசாலை) முன்னுரிமை கொடுக்காமல் எமது சமூக வளர்ச்சியை தடை செய்கின்றோம்.

7.05 தொடர்ந்து கல்வி கற்க முடியாதவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வி, சுயதொழில் கல்வி பற்றி செயல்படாமல் இருக்கின்றோம்.

7.06 தரமான ஆசிரியர் பற்றாக்குறையினால் எமது பிள்ளைகளுடைய கல்வித் தராதரம் ஏனைய சமுகத்தைவிட குறைவாகவே உள்ளது. ஆசிரியர் தொழிலில் பிற இனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம்.

7.07 எமது பிள்ளைக் காப்பகங்கள் எமது பிள்ளை களினுடைய எதிர்காலத்தைப் பாழாக்குகின்றன.

7.08 மலையக மக்களுக்காக உருவாக்கப்பட்ட கல்வியியற் கல்லூரி (ஸ்ரீபாத) முழுமையாக நடைபெறாமலும் மற்றைய இனத்தவர்களுக்கு இடம் கொடுத்திருப்பதும் இன்றைய நிலை.

7.09 மலையக மக்கள் கல்வியில் அரசு போதிய கவனம் செலுத்தாமல் மாற்றாந் தாய் மனப்பான்மையில் உள்ளது.

7.10 பாடசாலைக் கல்வி ஓரளவு நிறைவேற்றப்பட்டுள்ளது.

7.01 ஒவ்வொரு தோட்டத்திலும் முன்பள்ளி (பாலர் பாடசாலை) அமைத்து எமது பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சிக்குப் பாடுபடுவோம்.

7.02 ஒவ்வொரு பிள்ளையும் கல்வி பெறுவது அவர்களின் பிறப்புரிமை. இதற்காக ஆவன செய்ய முன்வர வேண்டும்.

7.03 எமது பாடசாலைகள் எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தி அடைந்து முறையான கல்வியை, முழுமையாகக் கொடுக்க எல்லா முயற்சிகளும் எடுப்போம்.

7.04 தொடர்ந்து படிப்பதற்கும், ஆசிரியர் சேவையில் மட்டும் தங்கிநிற்காமல் ஏனைய சேவைகளிலும் பங்குபெற முக்கியததுவம் கொடுப்போம்.

7.05 ஒவ்வொரு மலையக மாவட்டத்திலும் ஒரு தொழில்நுட்பப் பாடசாலை அமைக்க அயராது பாடுபடுவோம்.

7.06 ஒவ்வொரு மலையக மாவட்டத்திலும் ஆசிரியர் கலாசாலை ஒன்று நிறுவி ஆசிரியர் தராதரத்தை உயர்த்தி எமது சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்போம்.

7.07 பிள்ளைக் காப்பகங்கள் சரியான முறையில் அமைக்கப்பட்டுப் பிள்ளைகளினுடைய மொழியைத் தெரிந்தவர் ஒருவரால் முறையாகக் கவனிக்கப்பட வேண்டும்.

7.08 இந்தக் கல்வியியற் கல்லூரி மலையக மக்களுக்காக முழுமையாக ஒதுக்கப்பட்டு, இதன் நன்மைகளை முழுமையாகப் பெற்றுக் கொள்ளப் புதிய நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும்.

7.09 கட்டிடங்கள் அமைப்பது, காணிகள் முழுமையாக ஒதுக்கப்படுவது, விஞ்ஞான ஆய்வு கூடங்கள் அமைப்பது ஆகியவை சம்பந்தமாக அரசுடன் தொடர்புகொண்டு, தீர்மானங்களை அமுல்படுத்த வேண்டும்.

7.10 வாழ்க்கைக்கல்வி, முறைசாராக்கல்வி, விழிப்புணர்ச்சி இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும்.

8.01 நாம் உடல் உள சமூக நலன்களில் பாதிக்கப்பட்டவர்களாய் இருக்கின்றோம்.

8.02 குடும்ப சுகாதார வாழ்வு வீட்டுவசதியின்மை, தண்ணீரின்மை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது.

8.03 எமது சமூக சுகாதார வாழ்வு, சூழல் மாசுபடுவதால் பாதிக்கப்பட்டுள்ளது.

8.04 எமது நாட்டு, வீட்டு வைத்திய முறைகளைச் சரியாக அறியாமல் அதற்கு முன்னுரிமை கொடுக்-காமல் இருக்கின்றோம்.

8.05 லயன் காம்பராக்களில் உள்ள நெருக்கடி காரணமாகத் தொற்றுநோய்கள் இலகுவாகப் பரவுகின்றன.

8.06 வேற்றுமொழி பேசும் சுகாதார உத்தியோகஸ்தர்கள் காரணமாக முறையான நன்மை பெற முடியாமல் இருக்கின்றோம்.

8.07 முழுமையான சுகாதார சேவைக்குத் தேவையான அளவு நிதி ஒதுக்கப்படாமையால் எமது மக்கள் பாதிக்கப் படுகின்றார்கள்.

8.08 முழுமையான, போதிய பயிற்சி பெற்ற வைத்தியரில்லாமையினால் எமது சுகாதார வாழ்வு பின்னடைந்துள்ளது.

8.09 பலவருடங்களாகப் பூச்சி மருந்துகள் தோட்டங்களில் முறையாகக் கொடுக்கப்படாததினால் விசேஷமாக எமது பிள்ளைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

8.10 இன்றைய மலையக சுகாதார அமைப்பு முறை ஏனோதானோ என்ற ரீதியில்தான் அமைக்கப் பட்டிருக்கிறது. இன்னமும் தோட்டங்களில் துண்டுமுறை அமுலில் இருக்கிறது.

8.01 எமது சுகாதார வாழ்வை மேம்படுத்த எம்மால் இயன்றனவற்றைச் செய்ய முன்வருவோம்.

8.02 எமது குடும்ப வாழ்விற்குத் தேவையான வீடு, தண்ணீர் வசதிகள் பெற ஆவன செய்வோம்.

8.03 எமது சூழலைப் பாதுகாத்து சுத்தமாக வைத்துக் கொள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு மலசல கூடம் அமைக்க முன்வருவோம்.

8.04 எமது நாட்டு, வைத்திய முறைகளை அறிந்து, அதற்கேற்ற மூலிகைகளை எமது சூழலில் வளர்த்து இம்முறையைப் படிப்படியாகக் கையாள்வோம்.

8.05 தொற்றுநோய்கள் வருவதற்குமுன் அவற்றைத் தடுப்பதற்கேற்ற முறைகளைக் கையாள்வோம்.

8.06 எமது மக்கள் மத்தியில் ஒரு சிலரை முழுமையான சுகாதார உத்தியோகஸ்தர்களாக உருவாக்கி எமது சமூக முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவோம்.

8.07 தோட்ட நிர்வாகம், அரசாங்கம், தொழிலாளரின் நன்மை கருதி போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்ய ஆவன செய்வோம்.

8.08 முழுமையான பயிற்சி பெற்ற வைத்தியர்களை ஒவ்வொரு 500 குடும்பங்களுக்கு ஒருவர் என்ற ரீதியில் பெற ஆவன செய்வோம்.

8.09 எல்லா தோட்டங்களிலும் ஆறு மாதத்திற்குகொரு முறை பூச்சி மருந்து கொடுக்க ஆவன செய்வோம்.

8.10 அரசாங்கம் தனது மக்களுக்கு சுகாதார வசதிகளைக் கொடுக்க வேண்டியது அதன் கடமை என்ற எண்ணத்துடன் இந்த முறையை மாற்றியமைக்க ஆவன செய்வோம். இவற்றைப் பெறுவது எமது உரிமையுமாகும்.

9.1 தொழிலாளருக்காக உருவாக்கப்பட்ட தொழிற் சங்கங்கள் தொழிலாளரின் நல வாழ்க்கைக்கு முழுமையாக உதவாமல் போய்விட்டன.

9.2 மலையகத்தில் மஞ்சள் தொழிற்சங்கங்கள் மலிந்து போனதால் - (நிர்வாகம் - அரசுடன் கூடிய ஒத்துழைப்பு) தொழிலாளர் ஓரங்கட்டப்படுகின்றனர்.

9.3 அரசு சார்பற்ற நிறுவனங்கள் அநேகமாக தொழிலாளரின் முழுமையான சமூக வாழ்க்கையில் ஈடுபடாமல் பணம் பெறுவதிலேயே கண்ணாயுள்ளன.

9.4 நிறுவனங்கள் மக்களில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்து வதற்குப் பதிலாகப் பாரம்பரிய சமூகப் பணிகளுக்கே முன்னுரிமை கொடுக்கின்றன.

9.5 நிறுவன அங்கத்தினர் முழுமையான சமூக அறிவை ஆழமாகப் பெறாமல் நலன்புரி உத்தியோகஸ்தர் களாகவே உள்ளனர்.

9.6 எமது சமூகத்தில் பல்வேறு பெயர்களுடன் பல மன்றங்கள் அமைக்கப்பட்டு அநேகமாக அவை பொழுதுபோக்கு மன்றங்களாகவே இருக்கின்றன.

9.7 இந்த மன்றங்கள் தோட்டங்களில் இருக்கும் அநீதிகளை இனம் காணாமல் இருக்கின்றன.

9.8 இலக்கிய கலைகுழுக்கள் எமது மக்கள் மனதிலுள்ள தாழ்வு மனப்பான்மையை வளர்க்கின்றன.

9.9 ஒரு தோட்டத்திலுள்ள பல மக்கள் அமைப்புகள் தனித்தனியே செயல்படுகின்றன.

9.10 எமது மக்கள் இந்த அமைப்புக்களை இனங்காணாமல் அவர்களின் இலட்சியத்தையோ செயற்திட்டத்தையோ அறியாமல் எதைப்பெறலாமென்ற எண்ணத்தில் உள்ளனர்.

9.1 தொழிலாளரின் முழு வாழ்க்கையிலும் அக்கறை எடுத்து தொழிலாளர் செலுத்தும் பணத்தின் மூலமாகத் தொழிலாளர் சமூகத்தை முன்னேற்ற ஏற்பாடுகள் செய்வோம்.

9.2 சிகப்புத் தொழிற்சங்கங்கள் - (தொழிலாளர் சார்பாக) இந்தச் சங்கங்களை தொழிலாளரே அமைத்து தொழிலாளரின் வாழ்வை மேம்படுத்துவோம்.

9.3 சமூகத்தில் மக்களை அடிமைப்படுத்தும் அமைப்புகளை இனம் கண்டு அவற்றில் ஒரு மாற்றத்தை உருவாக்கப்பாடுபடுவோம்.

9.4 தொழிலாளருடன் சேர்ந்து சமூக பகுப்பாய்வு செய்வதன் மூலம் சமூக விழிப்புணர்ச்சியை உருவாக்கத் தெண்டிப்போம்.

9.5 நிறுவன அங்கத்தினர் முழுமையான சமூக அறிவைப் பெற்று மக்களது சமூக மாற்றத்தை ஊக்கு விப்பவர்களாக மாறவேண்டும்.

9.6 இந்த மன்றங்களின் இலட்சியம் மக்களிடையே செல்லவும், மக்கள் அறிவை வளர்க்கவும் பாடுபடுவதேயாகும்.

9.7 தோட்டங்களில் இருக்கும் அநீதிகளை இனங்கண்டு சமூகத்துடன் சேர்ந்து அவற்றை ஒழிக்கப் பாடுபடுவோம்.

9.8 இந்தக் குழுக்கள் கலை - இலக்கியம் மூலமாகப் புதிய சிந்தனைகளை மக்கள் மத்தியில் பரப்பி சமூகமுன்னேற்றத்திற்காகச் செயற்பட வைப்போம்.

9.9 எல்லா அமைப்புகளும் ஒன்று சேர்ந்து ஒருவர் ஒருவருக்கு உதவியாகப் பொதுத்திட்டங்கள் மூலமாக மக்களின் நல்வாழ்விற்காகப் பாடுபடுவோம்.

9.10 சகல அமைப்புகளின் இலட்சியங்களை அறிந்து அவற்றின் மூலமாக எமது சமூக மாற்றத்தை உருவாக்கப் பாடுபடுவோம்.

10.1 பெண்கள் பிறந்தவுடன் சமூகம் அவர்கள் வாழ்க்கை முறையை நிர்ணயிக்கின்றது.

10.2 பெண்களின் கல்விக்கு முன்னுரிமை கொடுக்காத தினால் எமது சமூகத்தில் கூடுதலான பெண்கள் எழுத வாசிக்கத் தெரியாதிருக்கின்றனர்.

10.3 உற்பத்திச் சக்தியில் பெண்கள் பங்கு பெறாததினால் சமுதாய நிர்வாகத்திலும் பெண்கள் பங்கு கொள்ளவில்லை.

10.4 அரசியல் வாழ்வில் பெண்கள் ஓரங்கட்டப்படு கின்றனர்.

10.5 தொழிற்சங்கங்கள், அமைப்புகள், மன்றங்கள் ஆகியவற்றில் முக்கியமான பங்களிப்பில்லாமல் சமுதாயத்தினால் விலக்கப்படுகின்றனர்.

10.6 குடும்ப உறவுகளில், குறிப்பாகத் திருமணம், சம்பளம் பெறுதல் ஆகியவற்றில் முன்னுரிமை கொடுக்காமல் விலக்கப்பட்டுள்ளனர்.

10.7 குறைந்த சுகாதார வசதி, குறைந்த அறிவு, போசாக்குள்ள உணவு உண்ணாமை ஆகியவற்றால் நோய்களுக்குள்ளாகின்றனர்.

10.8 இன்றைய நவீனக் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளினால் பெண்கள் கூடுதலாகப் பாதிக்கப் படுகின்றனர்.

10.9 பெண்கள் பல விதத்திலும் வன்செயல்களினால் பாதிப்படைகின்றனர். குறிப்பாகக் குடும்பத்திலும் வேலைத்தலத்திலும்.

10.10 பெண்கள் சமூகத்திலுள்ள மூட நம்பிக்கைகளினால், பாரம்பரிய அடக்கு முறையினால் அடிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

2000ம் ஆண்டில்

10.1 ஒரு பெண் பிறந்தநேரம் தொடக்கம் சமூக மூட நம்பிக்கைகளுக்கு உட்படாமல் சுதந்திரமாக வாழ வழிவகுக்க வேண்டும்.

10.2 பெண்களுக்கு ஆரம்பக்கல்வி தொடக்கம் கூட்டுக் கல்வி, முறைசாராக்கல்வி, தொழில்நுட்பக்கல்வி, உயர் தொழிலாளர் கல்வி ஆகியன கொடுக்க ஆவன செய்வோம்.

10.3 உற்பத்திச் சக்தி உள்ளவர்கள் ஏற்படுத்தும் உறவே சமுதாய நிர்வாகமாக மாறுகின்றது. இதில் பெண்களும் ஆண்களும் சமத்துவமாகப் பங்குபெறவேண்டும்.

10.4 அரசியல் விவகாரங்களில், தேர்தல் நியமன நடவடிக்கைகளில் சமத்துவம், நீதி ஆகியவற்றுடன் கூடிய பிரதிநிதித்துவம் பெறவேண்டும்.

10.5 தொழிற்சங்கங்கள், ஏனைய அமைப்புகள் ஆகிய வற்றில் இவர்கள் முழுமையான ஈடுபாட்டுடன் பங்குகொள்ள வேண்டும்.

10.6 குடும்ப உறவுகளில் ஆண்களும் பெண்களும் சமம் என்ற அடிப்படையில் எல்லா உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

10.7 போசாக்குள்ள உணவு, போதிய சுகாதார வசதிகள், குழந்தைப் பேற்றிற்கு முன் பின் பராமரிப்பு, ஓய்வு ஆகியவை உறுதிப்படுத்தப்படவேண்டும்.

10.8 குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப்பற்றிப் போதிய அறிவு, இனவிருத்தி கட்டுப்படுத்தும் சுதந்திரம், இயற்கை முறைகள் முதலியனவற்றை மக்கள் மத்தியில் பரப்பி அமுல் படுத்த வேண்டும்.

10.9 பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். குறிப்பாக குடும்பத்தில் பாலியல் பலாத்காரம், சித்திரவதை, கீழ்தரமாக நடத்தப்படல் ஆகியனவற்றைத் தடுக்க ஆவன செய்யவேண்டும்.

10.10 பெண்கள் விடுதலை பெற போதிய அறிவை விழிப்புணர்ச்சிக் கருத்தரங்குகள் மூலம் ஆழ்மனதில் பதிக்கவேண்டும். மூட நம்பிக்கைக்குப் பதிலாக விடுதலைச் சிந்தனையை ஏற்படுத்திச் சமூகத்தில் மாற்றத்தை உருவாக்க வேண்டும்.

# 2000ம் ஆண்டில் மலையக மக்களின் 20 தீர்மானங்கள்

1. மக்களின் கோட்பாடுகள்- ஒழுக்கம், ஒற்றுமை, துணிவு, சமத்துவம் ஆகும். எமது வாழ்க்கையில் அனைத்துப் பிரிவுகளையும் நாம் பின்பற்றிச் செல்வோம்.
2. நாங்கள் எங்கள் குடும்பங்களில் செல்வச் செழிப்பை ஏற்படுத்துவோம்.
3. நாங்கள் லயன் காம்பராக்களில் வசிக்கமாட்டோம். காணி பெற்று புதிய இல்லங்களில் வாழ்வோம்.
4. நாங்கள் சுதந்திரமாக மரக்கறி பயிரிடுவோம். அதிகமாக அவற்றை உணவாக உட்கொள்வோம். உபரியாக இருப்பவற்றை நாங்களே விற்பனை செய்வோம்.
5. நாங்கள் எங்கள் குடும்பங்களில் வீன் செலவைக் குறைப்போம். உடல் உள நலனில் கவனம் செலுத்துவோம்.
6. நாங்கள் எங்கள் சிறுவருக்காகப் பாலர் பாடசாலைகள் அமைப்போம். அவர்களின் கல்விக்கு முழு உரிமை கொடுப்போம்.
7. நாங்கள் எங்கள் பிள்ளைகளின் சுற்றம், சூழலை எபபோதும் சுத்தமாக வைத்திருப்போம்.
8. நாங்கள் மல சல கூடங்களை அமைத்து அவற்றை உபயோகிப்போம்.
9. நாங்கள் சுத்தமான நீரைக் குடிப்போம்.
10. நாங்கள் எவருக்கும் எவ்வித அநீதியையும் இழைக்க மாட்டோம். அதேபோல் பிறர் எங்களுக்கு அநீதி இழைக்கவும் விட மாட்டோம்.
11. உயர்ந்த வருமானங்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கூட்டாக இணைந்து பெரிய முதலீடுகளுக்குப் பொறுப்பேற்போம்.
12. எவருக்கும் எவ்வேளையிலும் உதவ நாங்கள் தயாராகஇருப்போம். விசேஷமாக கஸ்டத்தில் இருப்பவர்களுக்கு உதவுவோம்.
13. எந்தவொரு இடத்திலும் ஒழுக்காறு மீறப்பட்டதாக எமக்குத் தெரியவந்தால் நாம் அனைவரும் அங்கு சென்று, ஒழுக்காறுகளை மீண்டும் நிலை நிறுத்துவோம்
14. அனைத்து விதமான சமூக முன்னேற்ற நடவடிக்கைகளில் நாம் கூட்டாக ஈடுபடுவோம்.
15. எமது சமூகத்தைப் பற்றிய அறிவை வளர்க்கப் பத்திரிகைகள், புத்தகங்கள் ஆகியவற்றை வாசிப்போம். கருத்தரங்குகளில் பங்குபற்றுவோம்.
16. நாம் தனித் தேசிய இனம் என்ற எண்ணத்தில் ஒரு பிராந்திய சபையை உருவாக்கப் பாடுபடுவோம்.
17. நாம் இந்நாட்டு மக்கள். எனவே சகலரும் பிரஜாவுரிமை பெற்று, வாக்களித்து, சமத்துவமான உரிமைகளை பெறுவோம்.
18. நாங்கள் எல்லோரும் மாதச் சம்பளம் பெற்று முறையான வரவு செலவுத்திட்டத்தைக் கொண்டு வாழ முயற்சிப்போம்.
19. எமது பெண்களுக்கு சம உரிமையை எல்லா இடங்களிலும் வழங்குவோம். அவர்களுக்குச் சமத்துவம் கொடுப்போம்.
20. பெருந்தோட்டத்துறை அமைப்பைமாற்றி, ஒவ்வொரு தோட்டமும் ஒரு கிராம அமைப்பாக மாற பாடுபடுவோம்.

# 2000ம் ஆண்டில் மலையகம் ஆய்வுக் கொத்து

1. பொருளாதாரம்
1. மலையகத்தில் வேலை குறைந்துகொண்டு போகின்றதா? ஏன்?
1.2 குடும்பவாழ்வு நடத்தப் பொருளாதார ரீதியில் தேவையானது எது?
1.3 மலையகத்தில் முறையான சேமிப்பு முறைகள் உருவாகியுள்ளனவா?
1.4 குடும்ப பொருளாதாரத்தை பாதிப்பது எது?
1.5 சுயதொழில் அபிவிருத்திக்கு முக்கிய தேவைகள் யாவை?

2. அரசியல்
2.1 மலையக மக்கள் அரசியலில் ஈடுபட முக்கிய தேவை எது?
2.2 மலையக மக்களின் சனத் தொகைக்கேற்ப அரசியல் பிரதிநிதித்துவம் உண்டா?
2.3 பெருந்தோட்டத்துறை அமைப்பில் மலையக மக்கள் முழுமையான நன்மைகளை பெற முடிகிறதா?
2.4 மலையக மக்களுக்கு பிராந்திய சபைகள் தேவையா?
2.5 மலையகத்தில் புதிய தலைமைத்துவத்திற்கு இடமுண்டா?

3. சமூகம்
3.1 மலையக மக்கள் தனித் தேசிய இனமா?
3.2 தமது மொழியை சுதந்திரமாக அனுபவிக்கும் நிலையுள்ளதா?
3.3 தமது பண்பாட்டை இவர்கள் வளர்க்க முடியுமா?
3.4 இங்கு சாதிமுறை தொடர்ந்து அனுமதிக்கப்பட வேண்டிய தொன்றா?
3. மலையக மக்கள் மத்தியில் கொண்டுவரப்பட்டுள்ள குடும்பக் கட்டுப்பாட்டு முறை பயனுள்ளதா?

## 4. சமயம்
4.1 நமது சமயத்தை மூல நூல்கள் மூலமாக அறிந்திருக்கிறோமா?
4.2 சமயச்சடங்குகளுக்கும் திருவிழாக்களுக்கும் நாம் செலவு செய்யும் பணம் எவ்வளவு தூரம் நன்மையானது?
4.3 சமயக்குரவர்கள் சமூக முன்னேற்றதிற்காக உழைக்க வேண்டுமா?
4.4 சாதிக்கொரு கோயில் மலையகத்திற்கு தேவையா?
4.5 சமயம் மனித விடுதலைக்கு உதவக் கூடியதா?

## 5. கோட்பாடுகள்
5.1 பிறரில் தங்கி நிற்கும் மனப்பான்மை மாறுமா?
5.2 ஏனைய சமூகத்தினரைப்போல் சமத்துவமாக வாழமுடியுமா?
5.3 மலையக சமூகம் ஒற்றுமையாக வாழும் சிந்தனை உருவாகுமா?
5.4 விதியும் மூட நம்பிக்கைகளும் தானா நமது வாழ்க்கை?
5.5 மக்களின் சிந்தனையில் அவர்களின் சமூக முன்னேற்றத்திற்கு இடமுண்டா?

## 6. கலாச்சாரம்
6.1 எமது பாரம்பரிய விடுதலைக் கலாச்சாரம் எந்நிலையில் உள்ளது?
6.2 எமது மக்களின் தனித்துவமான கலாச்சாரத்தைப் பேணிக்காக்க முடியுமா?

5.3 இன்றைய நவின நுகர்வுக் கலாச்சாரத்திற்கு முன்னுரிமை கொடுக்கின்றோமா?

6.4 தனிமனித கலாச்சாரம், சமூக கலாச்சாரம் இவற்றில் நீர் விரும்புவது எது?

6.5 மலையகத்திலுள்ள வர்க்க கலாச்சாரத்தை மாற்ற முடியுமா?

## 7. கல்வி

7.1 நமது இளஞ் சிறார்களுக்கு முன்பாடசாலை அவசியமா?

7.2 எமது ஆசிரிய கலாசாலை மலையக மாவட்டங்களுக்கும் தேவையா?

7.3 ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி மலையக மக்களுக்கா?

7.4 கல்விக்காக காணி ஒதுக்கப்பட்டுள்ளதா?

7.5 ஒவ்வொரு மலையக மாவட்டத்திலும் தொழில்நுட்பக் கல்வி தேவையா?

## 8. சுகாதாரம்

8.1 சுற்றுச் சுழல் மாசடைவதே நம் சுகாதாரக்கேடு என்பதை ஏற்றுக்கொள்ளுகிறீரா?

8.2 மலையக சுகாதார சேவை அரசாங்கத்தின் கீழ் வர வேண்டுமா?

8.3 முழுமையாகப் பயிற்சிபெற்ற மருத்துவர்கள் மலையகத்தில் இருக்கிறார்களா?

8.4 போதுமான அளவு மருந்துகள் கிடைக்கின்றனவா?

8.5 நாட்டு வைத்தியத்திற்கும் சத்துள்ள உணவிற்கும் முன்னுரிமை கொடுக்கின்றோமா?

## 9. மக்கள் அமைப்புகள்

9.1 இன்றைய தொழிற்சங்கங்கள் எமது வாழ்க்கைக்கு உதவுகின்றனவா?

9.2 எமது முழு வாழ்க்கைக்கும் உதவக்கூடிய தொழிற்சங்கங்கள் அவசியமா?

9.3 அரசுசார்பற்ற அமைப்புகள் உங்கள் முழு முன்னேற்றத்திற்கும் உதவுகின்றனவா?

9.4 அரசியல் கூட்டங்கள் உங்களை ஒன்றுப்படுத்துகின்றனவா?

9.5 மலையகத்திலிருக்கும் மன்றங்கள் வெறும் பொழுது போக்கா அன்றேல் உங்கள் முன்னேற்றத்திற்கு உதவுகின்றனவா?

## 10. பெண்கள்

10.1 இலங்கையில் அதிகமாகப் பெண்கள் வேலை செய்யுமிடம் மலையகம் என்பதை அறிவீரா?

10.2 தொழில், வீட்டுப் பணி, பிள்ளைபேறு ஆகியவற்றின் பளு இவர்கள் மீதுள்ளது என்பதை இவர்கள் அறிந்துள்ளார்களா?

10.3 குடும்பத்தில், தொழில்புரியும் இடத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளனவா?

10.4 பெண்கள் தொழிற்சங்கத்தில், அரசியலில், கல்வியில், சமயத்தில், சமூக அமைப்புகளில் எந்நிலையில் உள்ளனர்?

10.5 பெண்கள் ஈடுபடுகின்ற வேலைகளில் மற்றவர்கள் அக்கறை காட்டுகின்றனரா?

## நிறைவுரை

2000ம் ஆண்டில் மலையகம் என்ற இச்சிற்றேட்டை வாசித்திருக்கும் உங்களுடன் சில வார்த்தைகள், கடந்த 175 வருடங்களாக, வாழையடி வாழையாக ஏறக்குறைய ஏழு தலைமுறைகளாக, பற்பல அடக்கு முறைகள், ஒடுக்கு முறைகள், அடிமைத்தனங்கள் அறியாமை ஆகியவை காரணமாக மனித மாண்பையு், மனித உரிமைகளையும் படிப்படியாக இழந்துள்ள மலையகம் 2000ம் ஆண்டிலாவது புதுவாழ்வு காண வேண்டுமென்ற என்ற நோக்குடன் மிக முக்கியமான விடயங்களில் ஏற்படவேண்டிய மாற்றங்களை மையமாக வைத்தே இச்சிற்றேடு தயாரிக்கப்பட்டது.

இது 1995 . 08. 24 தொடக்கம் 29 வரை பண்டாரவளை லியோ மார்கா ஆஸ்ரமத்தில் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் பெற்ற கருத்துக்களை மையமாக வைத்தே தயாரிக்கப்பட்டுள்ளது. இது ஆரம்பக் கட்டமே.

பலருடைய கருத்துக்களையும் எண்ணங்களையும் வரவேற்கிறோம். பலரின் கருத்துகள் ஒன்று சேரும் போது நன்மை பல பயக்கும் எண்ணங்கள் உருவாகும். அதன் மூலம் 2000ம் ஆண்டில் மலையகம் புதுப் பொலிவு பெறும். இதற்கு சகலரின் ஒத்துழைப்பையும் நாடிநிற்கிறோம்.

இந்த எண்ணங்களை நீங்கள் ஏற்றுக்கொண்டால், வரவேற்றால், இவற்றை பலரின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். மலையக மக்களின் விழிப்புணர்ச்சிக்கு வித்திடுங்கள். அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக சேவா மன்றங்கள், மலையகத்தில் பணி புரியும் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள், சபைத்தலைவர்கள் அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் இச்சிற்றேட்டை தங்களின் ஆய்வுகள், கருத்தரங்குகள், கூட்டங்கள் ஆகிய வற்றின் அடித்தளமாகப் பாவிக்க விளைய வேண்டும் என விரும்புகின்றோம். எம் உதவி தேவைப்படின் மகிழ்ச்சியுடன் செய்யக் காத்திருக்கிறோம்.

# மலையகம் 2000

## போட்டிகள்! போட்டிகள்!! போட்டிகள்!!!

★ கட்டுரைப் போட்டி

★ பேச்சுப் போட்டி

★ சுவரொட்டிப் போட்டி

நிபுந்தனைகளுக்கும் விண்ணப்பப் படிவத்திற்கும்
உடனே தொடர்பு கொள்க....

இயக்குனர்
லீயோ மார்கா ஆஸ்ரம்,
121/1, புனித தோமையார் வீதி,
பண்டாரவளை.